**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.111/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(கலைச்செல்வன்)**
**12.08.2025**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்துக்கள் பற்றிய விவரம் எனக்கு ஆவணங்களின் அடிப்படையில் தெரியும் என்றால் இல்லை நேரடியாகவே தெரியும்.

2. தாவா சொத்து யாரால் எப்போது கிரையம் பெறப்பட்டது என்றால் எனது பாட்டி தைலம்மையால் கிரையம் பெறப்பட்டது.

3. எனது பாட்டி தைலம்மை எப்போது இறந்தார் என்றால் 80 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது பாட்டி கிரையம் வாங்கிய பத்திரமோ அவரது இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது.

4. தாவா சொத்து எனது பாட்டி பெயரில் இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. கருப்பையாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

6. கருப்பையா உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்களை நான் பார்க்கும்போது கருப்பையா உயிருடன் இருக்கும்போதே தாவா சொத்து சம்மந்தமாக கிரையம் செய்த ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான்.

7. அவ்வாறு 27.12.2002ஆம் தேதி ஆவண எண் 921/2002 என்ற ஆவணம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தது என்றால் சரிதான். எனது தாத்தா உயிருடன் இருக்கும் வரை மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை.

8. வா.சா.ஆ.9 ஆவணத்தை யார் சான்றிட்ட நகல் பெற்றது என்றால் நான்தான் வாங்கினேன்.

9. வா.சா.ஆ.11 முதல் வா.சா.ஆ.21 வரையிலான ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் நான்தான் வாங்கினேன்.

10. எனது பாட்டி கிரையம் வாங்கியதாக சொல்லும் அசல் ஆவணம் எது என்றால் வா.சா.ஆ.2 பட்டா பாஸ் புத்தகம் மட்டும்தான்.

11. தாவா சொத்தை பொறுத்து கிரைய பத்திரம் ஏற்பட்டுள்ள விவரம் எப்போது தெரியவந்தது என்றால் 2017ஆம் ஆண்டு எனது தாத்தா இறந்தபிறகு எனது அப்பா பெயருக்கு பட்டா மாற்றுவதற்காக ஆவணங்களை பார்த்தபோது தெரியவந்தது.

12. 2ஆம் வாதி பெரியய்யா எனது தகப்பனார். வா.சா.ஆ.5 வில்லங்கம் பார்த்தபோது எனது அப்பாவும் சேர்ந்துதான் 2002ஆம் ஆண்டு கிரைய பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாக தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி பத்திரம் தொடர்பாக எனது அப்பா எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

13. தாவா சொத்துக்களை 2002ல் கிரையம் வாங்கியதாக சொல்லும் நபர் பெயர் ஜமால்முகமது என்றால் சரிதான். அந்த ஜமால்முகமது மீது நானோ, எனது தகப்பனாரோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், அவர் யார் என்று தெரியாது.

14. ஜமால்முகமதுவிற்கு கிரையம் கொடுக்கப்பட்ட ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

15. ஜமால்முகமது மோசடியாக கிரையம் பெற்றுள்ளார் என்றும், அந்த கிரையம் செல்லாது என்றும், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் புகார் கொடுத்து விசாரிக்கப்பட்டுள்ளது.

16. அவ்வாறு யார் புகார் கொடுத்தது என்றால் எனது தாத்தா கருப்பையா புகார் கொடுத்தார். எந்த வருடம் எனது தாத்தா புகார் கொடுத்தார் என்றால் 1996ல் புகார் கொடுத்தார்.

17. அவ்வாறு புகார் கொடுத்ததன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. யார் யார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது, அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடந்தது என்றால் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் ஜமால்முகமது மற்றும் அவர் தொடர்புடைய நபர்கள் மீது வழக்கு நடந்தது. அந்த வழக்கில் எனது அப்பா மற்றும் தாத்தா சாட்சியம் அளித்துள்ளார்களா என்றால் சாட்சியம் அளித்துள்ளார்கள். அந்த வழக்கு என்ன ஆயிற்று என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

18. ஜமால்முகமதுவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக ஜமால்முகமது கிரையம் பெற்ற அசல் ஆவணம் எங்குள்ளது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

19. ஜமால்முகமது வாங்கிய பத்திரம் செல்லாது என்று ஏதேனும் நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பசீர் என்பவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

20. சீனிவாசன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது, கேள்விப்பட்டுள்ளேன். தாவா சொத்தை பொறுத்து தற்போது 1ஆம் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் உள்ளது என்றால் சரிதான்.

21. தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பே 2, 3 நபர்கள் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு அதன்பிறகு 1ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதிக்கு முன்பு தாவா சொத்தை கிரையம் வாங்கிய நபர்கள் மீது நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

22. தாவா சொத்தின் ஒரு பகுதியை தனது குடும்ப உறுப்பினர்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு 1ஆம் பிரதிவாதி செட்டில்மென்ட்டாக கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

23. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எதன் அடிப்படையில் தைலம்மை பெயரில் இருந்து கருப்பையா பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

24. வா.சா.ஆ.2 பட்டா பாஸ் புத்தகத்திற்கு முன்பு அதில் கண்ட சொத்துக்களுக்கான ஆவணங்கள் யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

25. வா.சா.ஆ.3 சிட்டாவானது எனது தாத்தா இறந்தபிறகு எனது அப்பாவின் முயற்சியால் அவர் பெயருக்கு மாற்றப்பட்டது. அந்த பட்டா மாற்றத்திற்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது.

26. நாங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்துக்கள் வா.சா.ஆ.8ன் மூலம் 1ஆம் பிரதிவாதி பெயரில் பதிவு ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான்.

27. எனது தாத்தாவிற்கு எனது அப்பா ஒரே மகன். எனது அப்பாவும், எனது தாத்தா கருப்பையாவும், அவர்களது முழு சம்மதத்தின்பேரில் தான் 2002ஆம் ஆண்டே ஜமால்முகமதுவிற்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

28. அவ்வாறு அவர்கள் கிரையம் கொடுத்த பிறகு எனது தாத்தாவின் குடும்பத்தினர்கள் யாருக்கும் கிரையம் கொடுக்கப்பட்ட சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

29. கிரையம் பெற்ற நபர்களுக்கு தெரியாமல் பட்டாவை மாற்றிக்கொண்டு தாவா சொத்தில் நாங்கள் உரிமைகோருவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

30. தாவா சொத்தை தற்போது கிரையம் பெற்ற 1ஆம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றும், தாவா சொத்து அவர்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் உள்ளது.

31. தாவா சொத்தில் தைல மரங்கள் வைத்துள்ளதாகவும், பயிர்சாகுபடி செய்துள்ளதாகவும் சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

32. எனது தாத்தா மற்றும் அப்பா ஆகியோர் ஜமால்முகமது மீது புகார் கொடுத்து வழக்கு நடந்ததாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.

33. முறையாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்ற நபர்களின் உரிமையை நான் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. உண்மையான நோக்கத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் பெறும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

34. இவ்வழக்கு காலாவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/—திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.